# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

## ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

## (08.04.2015 முதல் 12.04.2015)

அறிக்கை எண் 26/2015 தேதி: 07.04.2015

### மாநிலத்தின் கடந்த வார வானிலை

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 33°செ முதல் 41°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 23°செ முதல் 29°செஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 19°செ முதல் 23°செஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செ முதல் 15°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஒரு சில இடங்களில் மழை காணப்பட்டது.

### எதிர்பார்க்கப்படும் வானிலை ஈரோடு ( 08.04.2015 முதல் 12.04.2015)

வரும் நாட்களில் வானம் இலேசான பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 38°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 26°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 70 முதல் 73 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 45 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 9 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்ப நிலை (°செ) | குறைந்த பட்ச வெப்ப நிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 08.04.15 | 1 | 38 | 26 | 5 | 70 | 45 | 9 | தெற்கு |
| 09.04.15 | 2 | 38 | 26 | 5 | 70 | 45 | 9 | தென் மேற்கு |
| 10.04.15 | 0 | 38 | 26 | 6 | 70 | 45 | 9 | தென் மேற்கு |
| 11.04.15 | 0 | 38 | 26 | 5 | 73 | 45 | 9 | தென் மேற்கு |
| 12.04.15 | 4 | 38 | 26 | 6 | 73 | 45 | 9 | தென் மேற்கு |

**வேளாண் அறிவுரை**

- ✓ பகல் மற்றும் இரவு நேர வெப்பநிலை உயர்ந்தும் மற்றும் காற்றின் ஈரப்பதம் குறைந்தும் காணப்படுவதால் தென்னை உட்பட அனைத்து இறவை பயிர்களுக்கும் மண்ணின் ஈரப்பதத்திற்கேற்ப நீர் பாய்ச்சவும்.
- ✓ கோடையில் பெய்யும் மழையுடன் காற்றின் வேகம் அதிகரிக்க வாய்ப்புள்ளதால் ஐந்து மாதங்களுக்கு மேலுள்ள வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும்.
- ✓ பகல் மற்றும் இரவு நேர வெப்பநிலை உயர்ந்து காணப்படுவது கால்நடைகளில் கருத்தரிக்கும் திறனை குறைக்கும், ஆதலால் செயற்கை முறை கருத்தரிப்பு செய்த கால்நடைகளுக்கு போதுமான குளிர்ந்த குடி தண்ணீர் கொடுப்பதுடன் அடிக்கடி நீராட்டுவது மூலம் கால்நடைகளின் கருத்தரிப்பு திறனை அதிகரிக்கலாம்.
- ✓ வெப்பநிலை உயர்ந்து காணப்படுவதால் கால்நடைகளுக்கு அதிகாலை, மாலை மற்றும் இரவு நேரங்களில் தீவனம் கொடுப்பது வெப்ப அயற்சியை குறைக்கும்.
- ✓ கோடை காலங்களில் பெறப்படும் மழையுடன் இடியும் மின்னலும் சேர்ந்து வரக்கூடும். எனவே கால் நடைகளை கூடாரங்களில் கட்டவும்.

**குறுஞ்செய்தி**

- ✓ கோடையில் பெய்யும் மழையுடன் காற்றின் வேகம் அதிகரிக்க வாய்ப்புள்ளதால் ஐந்து மாதங்களுக்கு மேலுள்ள வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**வேளாண் காலநிலைஆராய்ச்சி மையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை.**